2018 மே 29]

78—

தங்கும் விடுதி

***6392—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்குத் தொகுதியில் ஆண் தொழிலாளர்களுக்கென தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மரியாதையை முதற்கண் செலுத்துகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ், ஆண் தொழிலாளர்களுக்கென தனியாக தங்கும் விடுதி கட்ட வழிவகை இல்லை. எனவே, திருப்பூர் வடக்குத் தொகுதியில் ஆண் தொழிலாளர்களுக்கென தங்கும் விடுதி கட்டும் அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தாரை வாழ வைக்கும் திருப்பூர் மாநகரில் பனியன் தொழிலைப் பாதுகாக்க, சாய சலவைப் பட்டறைகளுக்கு ரூ.200 கோடியை வட்டியில்லாக் கடனாக வழங்கி, பனியன் தொழிலைப் பாதுகாத்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியிலே தமிழகத்திலே நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். ஆண்டொன்றுக்கு*

[2018 மே 29

ரூ.25,000 கோடியை அந்நிய செலாவணியாக அரசுக்கு ஈட்டித் தரும் நகரமாக திருப்பூர் மாநகரம் திகழ்கிறது. வளர்ச்சி அடைந்து வரும் தொழிலுக்கு ஏற்ப, அங்கே தொழிலாளர்கள் இல்லை. ஆகவே, வெளி மாவட்டம் மற்றும் வெளிமாநிலங்களைச் சார்ந்தவர்கள் இங்கே வந்து தங்கி வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் தங்குவதற்கு வீடு கிடைப்பதில்லை. இதனால், வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. பனியன் தொழிலைப் பாதுகாக்கிற நமது அரசு, திருப்பூர் மாநகரிலே, ஆண் தொழிலாளர்கள் தங்கி வேலை செய்வதற்கு வசதியாக, திருப்பூர் வடக்குத் தொகுதியிலே ஆண் தொழிலாளர்களுக்கென தங்கும் விடுதி அமைத்துத்தர முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பனியன் தொழிலைப் பற்றிப் பேசினார்கள். பனியன் தொழில் புரியும் தொழிலாளர்கள், அமைப்பு சார்ந்த தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, பனியன் தொழில் செய்யும் நிறுவனங்கள்தான் அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரம் என்பது, அரசுக்கு அந்நிய செலாவணி ஈட்டித் தரும் நகரமாக உள்ளது. அங்கே 10 இலட்சம் தொழிலாளர்களுக்குமேல் பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே, நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு, இந்த நிதியாண்டில் ஏதாவது ஒரு வகையில், ஆண் தொழிலாளர்களுக்கென தங்கும் விடுதி அமைத்துத் தர முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2018 மே 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதியில் அதிகமான தொழிலாளர்கள் இருக்கும்பட்சத்தில், அங்கே தொழிலாளர்கள் தங்குவதற்கான விடுதிகள் கட்டுவது குறித்து துறையின்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆம்பூர் பகுதியிலே அதிக அளவு தோல் தொழிற்சாலைகள் இருக்கின்றன. என்னுடைய திருவண்ணாமலை மாவட்டத்திலேயிருந்து அதிகமான தொழிலாளர்கள் ஆம்பூர் சென்று வேலை செய்யக்கூடிய நிலையிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதியாக ஆம்பூர் இருக்கின்ற காரணத்தால், அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் அங்கே தங்கி வேலை செய்யக்கூடிய அளவிற்கு தங்கும் விடுதி கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் நலத் துறையில் அதிக அளவு நிதியிருக்கிறது. ஆனால், தொழிலாளர்களுக்கான வசதிகள் அங்கே செய்து தரப்படாமல் இருக்கின்றன. ஆகவே, ஆம்பூரிலே தொழிலாளர்கள் தங்குவதற்கான விடுதி கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வாணியம்பாடி தொகுதியைச் சேர்ந்தவள் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, தொழிலாளர் நலத் துறையில் அதிகமான நிதி இருக்கின்றது என்று கூறினார்கள்.*

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் மட்டும்தான் அதிகமான நிதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தோல் தொழில் நிறுவனங்கள் private sectors ஆக இருக்கின்றன. அரசு எந்த நிதியும் அதில் செலவு செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தோல் தொழில் நிறுவனங்கள்தான் இந்த அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு இந்த விடுதிகளைக் கட்டித் தர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், சென்னை மற்றும் அதன் 5 புறநகர்ப் பகுதிகளிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 7 ஆயிரம் தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் 105 கோடி ரூபாய் செலவில் தூங்கும் அறைகள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் பொதுப் பணித் துறையின்மூலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம், எழிச்சூர் கிராமத்திலும், தையூர் பி. கிராமத்திலும் கட்டப்பட்ட தங்கும் அறைகள் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

பேருந்து வசதி

***29240—திரு. ஒய். பிரகாஷ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தாரவேந்திரம் ஊராட்சி, பி.பி. பாளையம் முதல் ஒசூர் வரை பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,